# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 42. நடமாடும் உணவு விற்பனையாளர்கள்; சமைக்கப்படாத / கழுவக்கூடிய உணவு

**விளக்கம்** – இந்த வழிகாட்டுதல்கள் உணவுப்பொருட்களை (உதாரணம்: மீன், இறைச்சி, காய்கறிகள், பழங்கள், உலர் உணவுப் பொருட்கள்) வீட்டுக்கு வீடு கொண்டு செல்லும் அல்லது நடையோர சிறிய கடைகளில் வைத்து விற்பனை செய்பவர்களுக்கானது.

***பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்***
***உரிமையாளர்/செயற்பாட்டாளர்***

- எப்போதும் ஒரு குறித்தொதுக்கப்பட்ட பிரதேசத்தில் அல்லது பாதையில் உங்களது வியாபாரத்தினை மேற்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடும் பிரதேசத்தில் இனங்காணப்படும் கோவிட்-19 நோயாளிகள் அல்லது கோவிட் நோயாளிகளுடன் நேரடித் தொடர்பினைப் பேணிய நபர்கள் குறித்த விபரங்கள் குறித்து உடனுக்குடன் அறிந்து கொள்ளுங்கள்.
- பொதுச் சுகாதார பரிசோதகர்களும் காவற்துறையினரும் தத்தமது பிரிவுகளில் செயற்படும் நடமாடும் உணவு விற்பனையாளர்களது விபரப்பட்டியலினைப் பேணவேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டு வியாபாரங்கள் மேற்கொள்வதற்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களினுள் ஒருபோதும் ஊடுருவ வேண்டாம்.
- நீங்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் வியாபாரத்தில் ஈடுபட வேண்டாம், அத்துடன் உங்களுக்காக உங்கள் வீட்டிலிருந்து வேறு எவரையாவது வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்காதீர்கள்.
- விற்பனைச் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு முன் பொருட்களை எடையிட்டுப் பொதி செய்துகொள்ளுங்கள்.
- உடல் இடைவெளியைப் பேணுவதற்காக ஒரு தடவையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களே பொருட்களை வாங்கலாம் என மட்டுப்படுத்துங்கள். உங்களது நடமாடும் வாகனத்தில் ஒரு தடவையில் பொருட்களை வாங்குவதற்கு எத்தனை வாடிக்கையாளர்கள் காத்திருக்கலாம் என்பதனைக் காட்சிப்படுத்துங்கள்.
- பணத்தினைப் பெற்று மிகுதிப் பணத்தினைக் கொடுக்கும் செயற்பாட்டினைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கவும். உதாரணமாக பத்து ரூபா, இருபது ரூபா, அய்ம்பது ரூபா.
- பணத்தை வைப்பதற்கு ஒரு பெட்டியை வைத்திருப்பதுடன் வாடிக்கையாளர்கள் தமது மிகுதிப் பணத்தை அப்பெட்டியில் இருந்து தாமே எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கவும்.
- எப்போதும் முகக்கவசத்தைச் சரியாக அணிந்து கொள்வதுடன், நீங்கள் அணிந்துள்ள முகக்கவசமானது ஈரமாகினால் அல்லது கிழிந்து போனால் உபயோகிப்பதற்கென மேலதிகமாக ஒரு முகக்கவசத்தினை உங்களது நடமாடும் வாகனத்தில் / விற்பனைக் கூடத்தில் வைத்திருங்கள்.
- வியாபாரச் செயற்பாட்டில் ஈடுபடும்போது பாவித்த பின்னர் வீசிவிடும் கையுறைகளைப் பயன்படுத்துங்கள்.
- உங்களது நடமாடும் வாகனத்தில்/ விற்பனைக் கூடத்தில் தொற்றுநீக்கியை வைத்திருப்பதுடன் நீங்கள் கையுறைகளைக் கழற்றும் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

**பயனாளர் / வாடிக்கையாளர் / எமக்கு**

- பொருட்களை வாங்கி வருவதற்குக் குடும்பத்தில் உள்ள ஒரு ஆரோக்கியமான இளையவர் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்.
- பொருட்களை வாங்குவதற்கு உங்களது சொந்தப் பை / கூடையை எடுத்துச் செல்லுங்கள்.
- முகக்கவசத்தைச் சரியாக அணியுங்கள்.
- எப்போதும் குறைந்தபட்சம் ஒரு மீற்றர் உடல் இடைவெளியைப் பேணவும்.

## தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

- பொருட்களை வாங்க குறைந்தளவு நேரத்தைச் செலவிடுங்கள்.
- பணத்தை பரிமாறிக்கொள்ளாமல், பொருட்களுக்கான சரியான தொகையைச் செலுத்தச் சில்லறை நாணயங்கள் / நாணயத் தாள்களை வைத்திருங்கள்.
  - நீங்கள் வீடு திரும்பியவுடன் சவர்க்காரம் மற்றும் தண்ணீர் உபயோகித்து ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்குக் கைகளைக் கழுவிக் கொள்ளவும்.
  - சேமித்து வைப்பதற்க்கு முன்பு அல்லது சமைப்பதற்கு முன்பு பொருட்களை நன்கு சுத்தம் செய்யுங்கள்.
  - பயன்படுத்திய முகக்கவசங்களை மூடியைக் கொண்டுண்டுள்ள ஒரு குப்பைத்தொட்டியினுள் பாதுகாப்பாகப் போட்டுவிடவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- பதிவு செய்யும் போது பிரதேசிய சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் தாள்
- அறிவிப்புப் பலகைகள்
- ஒவ்வொரு நடமாடும் வாகனத்திலும் / விற்பனைக் கூடத்திலும் அறிவித்தல்கள்/ சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துதல்.
- சமூக ஊடகங்கள்.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020